**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 150/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சிவசுப்பிரமணியன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. முருகன்** | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | |
| | | | **Dated** | : | **12.05.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 2–ம் எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 2), **திரு. சிவசுப்பிரமணியன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் திண்டுக்கல் பாலகிருஷ்ணாபுரத்தில் வசித்து வருகிறேன். பழைய சரக்கு வாகனங்களை வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். அசா. 1 ரமா எனது மனைவி. சாட்சிகள் ராஜ்குமார் மற்றும் செந்தில்குமார் ஆகியோரைத் தெரியும். அவர்கள் எனது நண்பர்கள் தான். ஆஜர் எதிரிகளைத் தெரியும். எதிரி பிரபாகரனையும் தெரியும். எதிரிகள் என்னிடம் பழைய சரக்கு வாகனங்கள் வாங்கினார்கள். அந்த வகையில் தெரியும்.

2–ம் எதிரி பிரபாகரன் வழக்கு சம்பவத்திற்கு 10 மாதங்களுக்கு முன்பாக என்னிடம் பழைய டாடா ஏசி வாகனத்தை ரூ. 1,25,000/–த்திற்கு

வாங்கினார். அவ்வாறு வாங்கிய சமயத்தில் ரூ.55,000/- மட்டும் முன்பணமாகக் கொடுத்தார். பாக்கி பணத்தை 15 நாட்களில் கொடுத்துவிடுவதாக கூறி வாகனத்தை எடுத்துச் சென்று விட்டார். பலமுறை போன் செய்து கேட்டும், பணத்தை கொடுக்கவில்லை. பின்னர் போன் எடுப்பதையே நிறுத்திவிட்டார்.

இந்நிலையில் 17.07.2021ம் தேதி காலை 10.00 மணியளவில் வேறு ஒரு போனில் இருந்து பிரபாகரனுக்கு போன் செய்து வண்டியை கொண்டு வந்து கொடுக்கவில்லை என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிடுவேன் என்று சொன்னேன். அன்றைய தினம் மாலை 06.30 மணியளவில் NGO காலனியில் உள்ள கண்ணு முகமது காம்ப்ளக்ஸில் உள்ள எனது அலுவலகத்திற்கு வந்து வாகனத்தை ஒப்படைத்துவிட்டார். அந்த வண்டியை முறையாக பராமரிக்காமல் நான் கொடுத்தபோது இருந்த நிலையைவிட மோசமாக வைத்திருந்தார். பொதுவாக டாடா ஏசி வாகனத்தை ஒரு நாள் வாடகைக்கு ரூ.500/-க்கு கொடுப்பார்கள். நான் அவ்வாறு இல்லாமல் நாள் ஒன்றிற்கு ரூ.250/- ஆவது வைத்து கடந்த 10 மாதங்கள் ஓட்டியதற்கு பணத்தை கழித்துக் கொண்டு பாக்கி பணத்தை வாங்கி கொள்ளுங்கள் என்று கூறி கலந்து பேசி சொல்லுமாறு சொன்னேன்.

மறுநாள் நான் தஞ்சாவூரில் இருந்தபோது மதியம் 12.00 மணியளவில் பிரபாகரன் எனக்கு போனில் தொடர்பு கொண்டு பேச வந்து இருக்கிறோம் என்று கூறி திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் கரூர் பேருந்து நிற்கும் இடத்திற்கு அருகே வரச்சொன்னார். அதனால் நானும், எனது மனைவியும் தஞ்சாவூரில் இருந்து புறப்பட்டு திண்டுக்கல் பேருந்து நிலையத்திற்கு மதியம் 1.30 அல்லது 2.00 மணியளவில் வந்து இருப்போம்.

வரும் வழியில் எனது நண்பர்கள் ராஜ்குமார் மற்றும் செந்தில்குமாரை திண்டுக்கல் பேருந்து நிலையத்திற்கு பேச வருமாறு கூறியிருந்தேன்.

நான் திண்டுக்கல் பேருந்து நிலையம் வந்தபோது, எனக்கு முன்பாகவே ராஜ்குமார் மற்றும் செந்தில்குமார் அங்கு வந்துவிட்டார்கள். நாங்கள் அனைவரும் சேர்ந்து எதிரிகளுடன் கரூர் பேருந்து நிற்கும் இடம் அருகே வைத்து பேசினோம். அவர் பேசியபோது 10 மாதங்களுக்கு மேலாக வண்டியை வைத்து இருந்ததாலும், அந்த வண்டியை ஓட்டி வியாபாரம் செய்து லாபம் ஈட்டி இருந்ததாலும், நியாயப்படி நாள் வாடகையாக ரூ.250/– அல்லது ரூ.300/– வைத்து கணக்கு பார்த்து பைசல் செய்யும்படி கேட்டேன். அவ்வாறு பேசிக்கொண்டு இருந்தபோதே எதிரிகள் பிரவீன்குமார் மற்றும் பிரபாகரன் ஆகியோர் என்னை பயமுறுத்தும் விதமாக சுற்றி சுற்றி வந்தார்கள். டேய் தேவிடியா மகனே ஏன்டா தாயோழி மகனே அக்கிரமம் பன்னிக்கிட்டு இருக்கியா என்று பிரபாகரனும், பிரவீன்குமாரும் திட்டினார்கள். இப்பவே முடிவு சொல்லிவிட்டுத்தான் போகவேண்டும் என்று சொன்னார்கள். நான் என் தரப்பு விளக்கத்தை சொல்லி கலந்து பேசிவிட்டு சொல்லும்படி கூறிவிட்டு, அந்த இடத்தை விட்டு கிளம்பும்போது, பிரபாகரன் பின்னால் இருந்து எனது சட்டையைப் பிடித்து இழுத்தார். நான் அவரிடம் இருந்து பிடுங்கிக் கொண்டு மிங்கில்ஸ் ரோட்டில் பேருந்து நிலையத்தை ஒட்டி சாமுவேல் குணசேகரன் மருத்துவமனை பக்கமாக ஓடினேன். சாமுவேல் குணசேகரன் மருத்துவமனை பக்கத்தில் பிரபாகரனும், பிரவீன்குமாரும் என்னை தடுத்து கீழே தள்ளிவிட்டார்கள்.

பிரபாகரன் கையில் வைத்திருந்த கத்தியால் எனது தலை, பின்னந்தலை மற்றும் தோள்பட்டை ஆகிய இடங்களில் குத்திவிட்டார். தற்போது வரை எனக்கு அந்த இடத்தில் வலி உள்ளது. அப்போது

பிரவீன்குமார் அருகில் கிடந்த கிரைண்டர் கல்லை எடுத்து என்மீது போட்டார். நான் கையால் தடுத்து தள்ளிவிட்டதில் வலதுகை ஆள்காட்டி விரலில் காயமாகி அதற்கு தையல் போட்டுள்ளேன். அப்போது ஜெயமாலா சாவுடா நீயெல்லாம் இருந்து என்ன பன்னபோற என்று என்னை எட்டி உதைத்தார். அத்துடன் நான் அந்த இடத்திலேயே மயங்கி விட்டேன்.

சுமார் 2 நாட்கள் கழித்து நான் கண் விழித்து பார்த்தபோது திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். மேற்படி சம்பவம் குறித்து எனது மனைவி கொடுத்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் சா.பொ1 கத்தியால்தான் சம்பவ சமயத்தில் 2–ம் எதிரி பிரபாகரன் என்னை குத்தினார். என்னிடம் காட்டப்படும் சா.பொ2 கிரைண்டர் கல்லைத்தான் 1–ம் எதிரி என்மீது போட்டார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

வண்டி வாங்கி விற்பதற்கான License என்னிடம் இல்லை. நான் வாங்கிக் கொடுத்த வண்டி வேறு ஒரு நபருக்கு சொந்தமானது. பாக்கித் தொகை ரூ.70,000/–த்தினை வண்டியின் உரிமையாளருக்கு நான் செலுத்தி விட்டேன் என்றால் சரிதான். வண்டியின் முழுத்தொகையையும் உரிமையாளருக்கு நான் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். வண்டியை 2–ம் எதிரி வசம் ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரிதான். வண்டியின் பதிவுச் சான்றிதழிலில் பழைய உரிமையாளரின் பெயரை மாற்றம் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் 2–ம் எதிரி ரூ.55,000/– பணம் கொடுத்தார், எந்த தேதியில் பாக்கி தொகை ரூ.70,000/–த்தினை நான் வண்டியின் உரிமையாளரிம் கொடுத்தேன் என்பதை தேதி குறிப்பிட்டு கூறிமுடியுமா என்றால் இல்லை. வண்டி விற்பனை செய்ததற்கு ஒரு எழுத்து மூலமான ஒப்பந்தம் போட்டுக்

கொண்டோம். அதை 2-ம் எதிரி வசம்தான் கொடுத்து இருந்தேன். எத்தனை வருடமாக பழைய வாகனங்களை வாங்கி விற்பனை செய்கிறேன் என்றால் 7-8 வருடங்களாக செய்கிறேன்.

ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட பின்னர் ஒப்பந்தத்தை யார் வைத்துக் கொள்ள வேண்டும் என்றால், பணம் கொடுத்தற்கு அத்தாட்சி வேண்டும் என்பதால் 2-ம் எதிரியிடமே கொடுத்துவிட்டேன். நான் நகல் எடுத்துக் கொள்ளவில்லையா என்றால் இல்லை. ஏன் நகல் எடுத்துக் கொள்ளவில்லை என்றால் ஒரு பிரதி மட்டும் தான் இருந்தது. மேற்படி விபரங்களை நான் போலீசார் விசாரித்தபோது கூறினேனா என்றால் இல்லை. 17.07.2021ம் தேதி 2-ம் எதிரிக்கு போன் செய்து வண்டியை கொண்டுவந்து விட்டுவிட்டு பணம் ரூ.55,000/-த்தினை வாங்கி செல்லும்படி 2-ம் எதிரியிடம் கூறினேனா என்றால் அவ்வாறு நான் கூறவில்லை, வண்டியைத்தான் கொண்டு வந்து கொடுக்குமாறு சொன்னேன். நான் மயக்கமாக இருந்ததால் எனது மனைவி என்ன சொல்லி புகார் கொடுத்தார் என்று எனக்குத் தெரியாது.

தஞ்சாவூரில் இருந்து நானும், என் மனைவியும் பேருந்தில் திண்டுக்கல் வந்தோம். 16.07.2021ம் தேதி வரை பாக்கி பணத்தைக் கேட்டு எதிரிகள் மீது ஏதேனும் நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் இல்லை. நாங்கள் எங்கு வரும்போது 2-ம் எதிரி எனக்கு போன் செய்தார் என்றால் மணப்பாறை வரும்போது எனக்கு போன் செய்தார். அதற்கு முன்பாக 2-ம் எதிரி என்னிடம் பேசினாரா என்றால் இல்லை. மணப்பாறையில் இருந்து திண்டுக்கல் பேருந்து நிலையம் செல்லும் வழியில் தான் NGO காலனியில் உள்ள எனது அலுவலகம் உள்ளது என்றும், அவ்வாறு அலுவலகம் செல்ல இடையில் ஒரு பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். 2-ம் எதிரி என்னிடம் போன் பேசியபோது NGO

காலனியில் உள்ள எனது அலுவலகத்திற்கு வருமாறு ஏன் கூறவில்லை என்றால் எனது நான்கு சக்கர வாகனம் திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் நிறுத்தி இருந்தேன். அதனால் அவர்கள் அழைத்ததும் திண்டுக்கல் பேருந்து நிலையம் வருவதாக கூறிவிட்டேன். நான் பேருந்து நிலையம் வருவதற்கு முன்பாகவே எனது நண்பர்கள் ராஜ்குமார், செந்தில்குமார் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் பேருந்து நிலையம் அருகே இருந்தார்கள். நான் பேருந்து நிலையம் வந்து எனது நான்கு சக்கர வாகனத்தை எடுத்துச் சென்று அவர்களை அழைத்து வந்தேன். மேற்படி விபரத்தை நான் போலீசார் விசாரித்தபோது கூறினேனா என்றால் அது பற்றி போலீசார் என்னிடம் கேட்கவில்லை.

தோராய நாள் வாடகையை கணக்கிட்டு பாக்கி தொகையை எதிரிகளிடம் கொடுக்க நான் முயற்சி செய்யவில்லையா என்றால், நாள் வாடகையை கணக்கிட்டால் நான் கொடுக்க வேண்டிய பணத்திற்கு கூடுதலாக அவர்கள் தான் கொடுக்க வேண்டியது இருந்தது. கூடுதலாக எதிரிகள் எவ்வளவு தொகை எனக்கு கொடுக்க வேண்டும் என்று கணக்கிட்டீர்களா என்றால், அதைப் பேசுவதற்காகத்தான் அன்றைய தினம் வரச்சொன்னோம். நான் உண்மையிலேயே பணத்தை வாங்கிக்கொண்டு வண்டியை கொடுத்து இருந்தால் அதற்கான வரவு செலவு கணக்குகளை முறையாக வைத்திருப்பேன் என்றால், முன்பணம் பெற்றுக் கொண்டு தான் வண்டியைக் கொடுத்தேன். உண்மையிலேயே எதிரிகளுக்கு வாகனத்தை முன்பணத்தை பெற்றுக் கொண்டு கொடுத்து இருந்தால் அதற்கான தேதியை குறிப்பிட்டு கூறியிருப்பேன் என்றால், நம்பிக்கையின்பேரில் தான் கொடுத்தேன்.

எனது இரத்தக்கறை படிந்த சட்டை பேண்டுகளை போலீசார் வாங்கிக் கொண்டார்களா என்றால், சட்டையை மட்டும் வாங்கினார்கள்.

சுயநினைவு வந்தபின்பு மருத்துவரிடம் யார் யார் என்னை தாக்கினார்கள் என்று கூறினேனா என்றால் இல்லை. பேருந்து நிலையம் எதிரே உள்ள மதுபானக்கடையில் நானும், எனது நண்பர்கள் ராஜ்குமார் மற்றும் செந்தில்குமார் மது அருந்திவிட்டு ஒருவொருக்கொருவர் தள்ளிவிட்டு கிழே விழுந்ததில் தான் எனக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் முன்பணமாகக் கொடுத்த ரூ.55,000/–த்தினை அபகரிக்கும் நோக்கில் எதிரிகள்மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் எதிரிகளால் ஏற்பட்டது இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

Taken down by me/before me in open court on 12.05.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.05.12 17:17:23 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**